சபரகமுவ மாகாண கல்வித் திணைக்களம்

# கணக்கீடு – 33 தரம் - 13

# Covid – 19 இடர் விடுமுறைகால பயிற்சி

## தேர்ச்சி 14 – கூலிக் கிரயம்

**Week : Sep 13 – 17** **தயாரிப்பு : சஜித்.sp**

**இரத்தினபுரி தமிழ் தேசிய கல்லூரி** **BBA(Financial Spl), University of Colombo**

**01.** நிறுவனமொன்றின் 10 ஊழியர்கள் நாளொன்றுக்கு 8 மணித்தியாலப்படி வாரமொன்றில் 5 நாட்கள் கடமைபுரிந்தனர். ஒரு மணித்தியாலயத்திற்கான கூலி ரூபா 100 எனின், வாரத்திற்கான மொத்தக்கூலியைக் கணிப்பிடுக?

**02.** நிறுவனமொன்றின் 20 ஊழியர்கள் நாளொன்றுக்கு 8 மணித்தியாலப்படி வாரமொன்றில் 6 நாட்கள் கடமைபுரிந்தனர். ஒரு மணித்தியாலயத்திற்கான கூலி ரூபா 120 எனின், வாரத்திற்கான மொத்தக்கூலியைக் கணிப்பிடுக?

**03.** நிறுவனமொன்றில் 15 ஊழியர்கள் நாளொன்றுக்கு 8 மணித்தியாலப்படி வாரமொன்றில் 5 நாட்கள் கடமைபுரிந்தனர். ஒரு மணித்தியாலயத்திற்கான கூலி ரூபா 200 எனின், வாரத்திற்கான மொத்தக்கூலியைக் கணிப்பிடுக?

**04.** நிறுவனமொன்றில் கடமை புரியும் மூன்று ஊழியர்களின் உற்பத்தி அலகுகள் தொடர்பான தரவுகள் பின்வருமாறு.

| ஊழியர்கள் | உற்பத்தி அலகுகள் |
|---|---|
| அமீர் | 500 |
| சினேகன் | 800 |
| சுலைமான் | 600 |

அலகுக்கான உற்பத்திக்கூலி ரூபா 50 ஆகும். மொத்த துண்டுக்கூலியினைக் கணிப்பிடுக.

**05.** அரவிந்த் எனும் ஊழியர் வாரமொன்றில் 40 மணிநேரம் வேலை செய்து 200 அலகுகளை உற்பத்தி செய்தார். ஒரு மணித்தியாலத்திற்கான உத்தரவாத நேரக்கூலி ரூபா 150 ஆகும். ஒரு அலகிற்கான துண்டுக்கூலி 35 எனின், நேரக்கூலியின் அடிப்படையிலும் துண்டுக் கூலியின் அடிப்படையிலும் வாரக் கூலியினைக் கணிப்பிடுக.

**06.** வேலை 1 இனை முதலிலும் அதனை தொடர்ந்து வேலை 2 இனை செய்யும் ஊழியர் ஒருவர் தொடர்பான தரவுகள் பின்வருமாறு:

| | வேலை – 1 | வேலை – 2 |
|---|---|---|
| ஒதுக்கிய நேரம் (மணித்தியாலம்) | 8 | 4 |
| எடுத்த நேரம் (மணித்தியாலம்) | 6 | 4 |

சாதாரண மணித்தியாலம் நாளொன்றுக்கு 8 மணித்தியாலம் ஆகும். சாதாரண மணித்தியால மொன்றிற்கான கூலி ரூபா 100 ஆகும். மேலதிக நேர மணித்தியால மொன்றிற்கான கூலி சாதாரண மணிக்கொடுப்பனவின் 150% ஆகும். சேமித்த நேரத்திற்கான கொடுப்பனவு சாதாரண மணிக்கொடுப்பனவின் 50% ஆகும்.

1) ஊழியரின் வேலை – 1 இலிருந்து வருமானம் யாது?
2) ஊழியரின் வேலை – 2 இலிருந்து வருமானம் யாது?
3) மொத்த உழைப்பு வருமானம் யாது?